DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | |
|---|---|---|
| In the Court of | : | Judicial Magistrate No.IV, Madurai |
| C.C.No. | : | 436/22 |
| Deposition of Witness for | : | Prosecution PW.1 |
| Name | : | சுந்தரி |
| Wife of | : | பாபு |
| Village | : | |
| Religion | : | |
| Age | : | 40 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 06.02.2024.

2 ம் எதிரி அஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை-</u>

நான் தற்போது மதுரை திருப்பரங்குன்றம் ஹார்விபட்டியில் வசித்து வருகிறேன். நான் ஜவுளி கடையில் வேலை செய்து வருகிறேன். 16.02.2019 ம் தேதி எனது நானும், எனது கணவரும் ஜவுளி கடையில் வேலை முடிந்தபிறகு ஸ்கூட்டி TN 58 AM 2871 என்ற இருசக்கர வாகனத்தில் என் கணவர் ஓட்ட நான் பின்னால் உட்கார்ந்துகொண்டு வீட்டிற்கு சென்று கொண்டிருந்தபோது பழங்காநத்தம் லிங்கா பைக் ஷோரூம் அருகில் இரவு 09.20 மணிக்கு வடக்கில் இருந்து தெற்கு நோக்கி இடதுபக்கமாக ஓரமாக சென்று கொண்டிருந்த எதிர்பக்கத்தில் இருந்து இருசக்கர வாகனத்தில் ஓர் ஆண் நபர் ஹீரோ ே ஹாண்டா வாகனத்தை ஓட்டிவந்து நாங்கள் சென்ற வாகனத்தின் மீது மோதியதால் எனது கணவர் சுதாரித்து நிற்பதற்குள் பின்னால் வந்த காரை ஓட்டிவந்த நபர் எங்கள் இருசக்கர வாகனத்தின் பின்புறம் மோதியதில் நான் இடதுபக்கமும், எனது கணவர் வலதுபக்கமும் விழுந்தார், காரின் சக்கரம் எனது கணவர் மீது ஏறியது.

எனது கணவருக்கு வலது கால், இடதுபுறம் மார்பு ஆகிய பகுதிகளில் அடிபட்டது. எனக்கு உடல் முழுவதும், வலுதுபக்க முகத்திலும் அடிபட்டது. அருகில் இருந்தவர்கள்

வந்து எனது கணவரை மீட்டு என்னையும், எனது கணவரையும் நித்திலா மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள். அங்கிருந்து என்னையும், எனது கணவரையும் மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். என்னை சிகிச்சை முடிந்து வீட்டிற்கு அனுப்பி வைத்துவிட்டார்கள். எனது கணவர் அன்று இரவு 12.30 மணிக்கு மேல் இறந்துவிட்டதாக சொன்னார்கள். ஆஜர் 2ம் எதிரி இமானுவேல் ஜான்சன் என்பவர் தான் காரை ஓட்டி வந்த நபர் ஆவார். **(** சாட்சி **2**ம் எதிரி இமானுவேல் ஜான்சன் என்பவரை நீதிமன்றத்தில் அடையாளம் காட்டினார்**)**

இருசக்கர வாகனம் ஓட்டி வந்த நபரை தற்போது பார்த்தாலும் என்னால் அடையாளம் சொல்ல முடியும். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் நான் கொடுத்தது தான். (புகார் மனு அ**.**சா**.**ஆ**.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1**ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை **-**

நாங்கள் சென்ற சாலை எப்போதும் போக்குவரத்து நிறைந்து காணப்படும் என்றால் தற்பொழுது போக்குவரத்து நெரிச்சல் உள்ளது, அப்போது அவ்வளவாக இல்லை. தினமும் அந்த வழியாக தான் செல்வேன் என்றால் சரிதான். காலையில் வரும்போது அதிக போக்குவரத்து நெரிச்சல் இருக்குமா என்றால் அப்போது நார்மலாக இருந்தது. சம்பவயிடத்தில் ரோடு குறுகலாக இருக்கும் என்றால் சரிதான். சீக்கிரமாக வீட்டிற்கு போக வேண்டும் என்ற எண்ணத்தில் வேகமாக சென்றோம் என்றால் சரியல்ல. எனது கணவருக்கு லைசன்ஸ் உண்டா என்றால் உள்ளது. விபத்தின்போது எனது கணவர் தலைகவசம் அணிந்திருந்தாரா என்றால் அணிந்திருந்தார். அதை நான் புகாரில் எனது கணவர் தலைகவசம் அணிந்திருந்ததாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

எனக்கு அடிபட்டவுடன் 2ம் எதிரி காரில் தான் எங்களை மருத்துவமனைக்கு கூட்டிச்சென்றார்கள் என்றால் சரிதான். காரில் 1ம் எதிரியும் மருத்துவமனைக்கு வந்தார் என்றால் எனக்கு தெரியாது. மருத்துவமனையில் இருப்பதாக சொன்னார்கள். எதிர்பக்கம் பைக்கில் வந்தவருக்கும் அடிபட்டு இருந்ததது என்றால் சொன்னார்கள் அடிபட்டதை நான் பார்க்கவில்லை. 1ம் எதிரியின் அஜாக்கிரதையாக விபத்து

நடக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவயிடமானது குறுகலாக இருப்பதால் நாங்கள் வேகமாக வந்ததாலும், போக்குவரத்து நெரிச்சல் இருந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. 1ம் எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**2**ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை - நான் காவல்நிலையத்தில் கொடுத்த புகாரை யார் எழுதியது என்றால் போலிசார் எழுதினார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அதில் என்ன எழுதினார்கள் தெரியுமா என்றால் நான் சொன்னதை எழுதினார்கள், நான் வாசித்து பார்க்கவில்லை. எதிர்புறம் வந்த இருசக்கர வாகனம் வேகமாக வந்து எங்கள் வண்டியில் மோதியது என்றால் சரிதான். எங்களது வண்டிக்கும், எதிர்புறம் வந்த இருசக்கர வாகனத்திற்கும் சேதம் ஏற்பட்டது என்றால் எங்கள் வண்டிக்கு சேதம் ஏற்பட்டது. எதிர்புறம் வந்த இருசக்கர வாகனத்திற்கு சேதம் ஏற்பட்டதா என்பதை நான் கவனிக்கவில்லை.

நானும், எனது கணவரும் கீழே விழுந்ததில் எனக்கு நிறைய காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். பின்னால் வந்த கார் சுமார் 10 அடி தூரம் இடைவெளியில் வந்திருக்குமா என்றால் வந்திருக்கும். பின்னால் வந்த கார் மிதமான வேகத்தில் வந்ததால் எங்கள் மீது மோதாமல் இருக்க பிரேக் பிடித்து நிறுத்திவிட்டார் என்றால் சரியல்ல. எனக்கும், எனது கணவருக்கும் ஏற்பட்ட காயத்திற்கு 2ம் எதிரி எந்த காரணமும் இல்லை என்றால் சரியல்ல. புகாரை எங்கு வைத்து கொடுத்தேன் என்றால் நித்திலா மருத்துவமனையில் வைத்து கொடுத்தேன். புகாரை காவல்நிலையத்தில் கொடுத்ததாக சொல்வது தவறு. எனது கணவருக்கு 2ம் எதிரி தான் உதவி செய்தார் இழப்பீடு அதிகம் பெறுவதற்காக போலிசார் எழுதிக்கொடுத்த புகாரில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. 2ம் எதிரிக்கும், வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

17.02.2019 ம் தேதி காலை 07.00 மணிக்கு காவல்நிலையத்தில் ஆஜராகி நான் புகார் கொடுத்ததாக சொல்வது தவறு என்றால் சரிதான். போலிசார் என்னை எங்கு வைத்து விசாரித்தார்கள் எனக்கு ஞாபகமில்லை. புகார் நான் கொடுக்காமல் போலிசார் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரியல்ல. என்னை போலிசார் விசாரிக்காமல் காவல்நிலையத்தில் வைத்து வாக்குமூலம் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரியல்ல.

என்னை 2ம் எதிரி தான் மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் என்றால் சரிதான். என்னையும், எனது கணவரையும் நித்திலா மருத்துவமனைக்கு காரியாபட்டியை சேர்ந்த பாண்டி என்பவர் கூட்டிச்சென்றார் என்றார் சரிதான். 2ம் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | |
|---|---|---|
| In the Court of | : | Judicial Magistrate No.IV, Madurai |
| C.C.No. | : | 436/22 |
| Deposition of Witness for | : | Prosecution PW.2 |
| Name | : | பநீதர் |
| Son of | : | கிருஷ்ணசாமி |
| Village | : | |
| Religion | : | |
| Age | : | 51 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 06.02.2024.

2 ம் எதிரி அஜர். 1ம் எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு, அனுமதிக்கப்பட்டது.

<u>முதல் விசாரணை-</u>

நான் தற்போது மதுரை ஹாரியபட்டியில் வசித்து வருகிறேன். நான் ஸ்டியோ வைத்து நடத்தி வருகிறேன். தேதி, மாதம் ஞாபகமில்லை. சுமார் 5 வருடத்திற்கு முன்பு மதியம் குறிப்பாக நேரம் தெரியவில்லை பழங்காநத்தம் அருகில் விபத்து நடந்துள்ளதாக சுப்பிரமணியபுரம் போலிசார் இரண்டுபேர் வந்து என்னை சாட்சியாக இருக்க சொன்னார்கள், நான் சரி என்று சொன்னேன். படத்தை காட்டி இங்கு விபத்து நடந்ததாக சொன்னார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வைமகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **(**பார்வைமகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ**.**சா**.**ஆ**.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது**).** என்னிடம் காண்பிக்கப்படும் மாதிரிவரைபடம் விபத்து நடந்த இடத்திற்கான மாதிரிவரைபடமாகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க சாட்சி பகுதி பிறழ் சாட்சியாக அறிவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை-

கடந்த 17.02.2019ம் தேதி காலை 08.30 மணிக்கு திருப்பரங்குன்றம்

மெயின்ரோடு பழங்காநத்தம் லிங்கா பைக் ஷோரூம் முன்பு விபத்து நடந்த இடத்தை சுப்பிரமணியபுரம் போலிசார் என் முன்னிலையிலும், நாகமுத்து என்பவர் முன்னிலையிலும் பார்வையிட்டு மாதிரிவரைபடம் மற்றும் பார்வைமகஜர் தயார் செய்தார்கள் என்றால் சரிதான். நான் ஏன் முதல் விசாரணையில் சொல்லவில்லை என்றால் நான் தற்பொழுது தான் நீதிமன்றத்திற்கு வருகிறேன் எனக்கு தெரியாது.

**1**ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை - அ.சா.1 சுந்தரி எனக்கு பழக்கம் என்றால் சரியல்ல. ஒரே பகுதியில் குடியிருக்கிறோம் என்றால் சரிதான். நான் அ.சா.1 சொன்னதின் பேரில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. போலிசார் சொன்னதால் கையொப்பம் செய்தேன். ஏற்கனவே வரைந்த படத்தில் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல. அங்கு வைத்து தான் வரைந்தார்கள். ஸ்டேசனில் வைத்து வரைந்தார்கள் என்றால் இல்லை, சாட்சி தற்பொழுது ஸ்டேசனில் வைத்து வரைந்தார்கள் என்று சொல்கிறார். அப்பொழுது மதியம் சுமார் 02.30 மணி இருக்குமா என்றால் நேரம் தெரியவில்லை, மதிய நேரமாகும். நான் மட்டும் தான் அங்கிருந்தேன், நாகமுத்து பிறகு தான் வந்தார் என்றால் சரிதான். அவர் மதியத்திற்கு பிறகு தான் வந்தார் என்றால் எனக்கு தெரியாது. மதியம் போலிசார் கேட்டதால் தான் காவல்நிலையம் சென்றோம் என்றால் சரிதான்.

**2**ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை - காவல்துறையில் இருந்த என்னை விசாரித்த காவலர்களின் பதவி நிலை தெரியுமா என்றால் தெரியாது. உதவி ஆய்வாளர், காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்களா என்றால் தெரியாது. நான் டிப்ளமோ படித்துள்ளேன். காவலர்களை பார்த்தால் அவர்கள் பதவி நிலையை சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியும். சம்பவயிடம் எனக்கு தெரியாது என்றால் போலிசார் அங்கு நடந்ததாக சொன்னார்கள். சம்பவயிடத்திற்கு நான் போலிசாருடன் செல்லவில்லை என்றால் சரிதான். போலிசார் கேட்டுக்கொண்டதன் பேரில் நான் கையொப்பம் மட்டும் செய்தேன் வேறு விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் விசாரித்தார்கள். நானும், நாகமுத்துவும் சம்பவயிடத்திற்கு செல்லவில்லை என்றால் சரிதான்.